www.Padasalai.Net www.TrbTnpsc.com

V12Acc

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 12

கால அளவு: 1.30 மணிநேரம் **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்: 50

பகுதி -அ

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10×1=10**

1) ரூ.8 செலுத்தப்பட்ட ரூ.10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு எனில் அதன் குறைந்தஅளவு மறுவெளியீட்டு விலை
   அ) பங்கொன்றுக்கு ரூ.10 ஆ) பங்கொன்றுக்கு ரூ.8
   இ) பங்கொன்றுக்கு ரூ.5 ஈ) பங்கொன்றுக்கு ரூ.2

2) முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) பத்திரமுனைம க/கு ஆ) அழைப்பு முன்பண க/கு
   இ) பங்கு முதல் க/கு ஈ) பங்கு ஒறுப்பிழப்பு க/கு

3) பங்கு ஒறுப்பிழப்பு இலாபம் ரூ.800 மறுவெளியீட்டு நட்டம் ரூ.300 எனில் முதலின காப்பு?
   அ) ரூ.500 ஆ) ரூ.600 இ) ரூ.700 ஈ) ரூ.800

4) நிதி எனும் சொல் குறிப்பிடுவது
   அ) நடப்பு பொறுப்பு ஆ) நடைமுறை முதல்
   இ) நிலை சொத்து ஈ) நடப்பு சொத்து

5) ஒருவரையறு நிறுமத்தின் விற்பனை ரூ.125000 லிருந்து ரூ.150000க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றும்
   அ) +20% ஆ) +120% இ) –120% ஈ) –20%

6) ஒரு பொது அளவு இருப்பு நிலைகுறிப்பில் நீண்ட கால சொத்திக்களின் சதவீதம் 75 எனில் நடப்பு சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100

7) நடப்பு பொறுப்பு ரூ.40000 நடப்பு சொத்து ரூ.100000 சரக்கிருப்பு ரூ.20000 எனில் விரைவு விகிதம்
   அ) 1 : 1 ஆ) 2 : 5 : 1 இ) 2 : 1 ஈ) 1 : 2

8) விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை ரூ.300000 அவ்வாண்டின் தொடக்க சரக்கிருப்பு ரூ.60000 அவ்வாண்டின் இறுதி சரக்கிருப்பு ரூ.40000 எனில் சரக்கிருப்பு சுழற்சி விகிதம்
   அ) 2 மடங்கு ஆ) 3 மடங்கு இ) 6 மடங்கு ஈ) 8 மடங்கு

9) பின்வருவனவற்றில் சரியாக பொருந்தாதது எது?
   அ) நீர்மை விகிதம் - விகிதாச்சாரம்
   ஆ) மொத்த இலாப விகிதம் - சதவீதம்
   இ) நிலை சொத்து சுழற்சி விகிதம் - சதவீதம்
   ஈ) புற அக பொறுப்பு விகிதம் - விகிதாச்சாரம்

10) இயக்க அடக்க விகிதம் + இயக்க இலாப விகிதம் = ?
   அ) 80% ஆ) 90% இ) 100% ஈ) 70%

பகுதி -ஆ

**II. எவையேனும் ஐந்திற்கு விடையளி. வினா எண் 18 கட்டாய வினா 5×2=10**

11) பங்கு என்றால் என்ன?

12) பங்கு ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகிறது.

13) நிதிநிலை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்

14) போக்கு பகுப்பாய்வு எப்போது இதர பகுப்பாய்வு கருவியை விட ஏற்புடையதாகும்?

15) ஆஷிகா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து நிலை சொத்து சுழற்சி விகிதத்தை கணக்கிடவும். விற்பனை மூலம் பெற்ற வருவாய் ரூ.6000000 அவ்வாண்டின் இறுதியில் நிலை சொத்துகள் ரூ.600000

16) சாரா நிறுமம் பங்கொன்றுக்கு ரூ.10 வீதம் 10,000 நேர்மை பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. கீழ்கண்ட நிலைகளில் குறிப்பேட்டு பதிவு தருக.
   அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

17) விடுபட்ட விவரங்களை நிரப்புக

| நாள் | விவரம் | பேபஎ | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1 | ................ க/கு ப<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு வ<br>ஒன்று ரூ. 1 வீதம் ஒதுக்கீட்டு தொகை பெற்றது | | 200000 | 200000 |
| 2 | பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>................ க/கு<br>பங்கு ஒதுக்கீட்டு பணம் பங்கு முதல் க/கிற்கு மாற்றியது | ப<br>வ | 200000 | ------- |

18) ஆனந்த கட்டுமான நிறுமத்தின் விரைவு விகிதம் கணக்கிடுக
நடப்பு சொத்துக்கள் - 250000
நடப்பு பொறுப்புகள் - 100000
சரக்கிருப்பு ரூ. - 50,000
முன்கூட்டி செலுத்திய செலவு ரூ.15,000

## பகுதி -இ

**III. எவையேனும் ஐந்திற்கு விடையளி. வினா எண் 26 கட்டாய வினா 5×3=15**

19) விகித பகுப்பாய்வின் மூன்று நன்மைகள் தரவும்?

20) நிதிநிலை அறிக்கைகள் கடந்த கால விவரங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுகின்றன. இது எப்படி ஒரு குறைபாடாகும் விளக்குக.

21) ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படி நிலைகளை தரவும்.

22) சிறுகுறிப்பு வரைக.
அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) காப்பு முதல்

23) ஒரு வணிக நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து நிகர இலாபவிகிதம் கணக்கிடவும்
விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் 960000 விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கள் அடக்கவிலை ரூ.550000. அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூ.145000, விற்பனை மற்றும் பகிர்வு செலவுகள் - 25000

24) அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களில் இருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்க

| விவரம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50000 | 60000 |
| இதர வருமானம் | 10000 | 30000 |
| செலவுகள் | 40000 | 50000 |

25) பாரடைஸ் வரையறு நிறுமம் ரூ.440000 மதிப்புள்ள சொத்துக்களை சுகுணா அறைகலன் வரையற நிறுமத்திடமிருந்து வாங்கியது. இதற்கு பதிலாக ரூ.10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக செலுத்தி நிறைவு செய்தனர். பின்வரும் சூழலுக்கான பதிவினை தரவும்
அ) பங்குகளை முகமதியில் வெளியிட்டால்
ஆ) பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டால்

26) கௌதம் வரையறு நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 500 நேர்மை பங்குகளின் இறுதி அழைப்பு பணம் ரூ.2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்து அதை மதன் என்பவருக்கு பங்கு ஒன்று ரூ.8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது ஒறுப்பிழப்பு, மறு வெளியீட்டு கான குறிப்பேட்டு பதிவு தரவும்?

## பகுதி -ஈ

**II. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3×5=15**

27) அ) தங்கம் நிறுமம் பங்கொன்றுக்கு ரூ. 10 வீதம் 50000 பங்குகளை பங்கொன்று ரூ.2 வீதம் முனைமத்தில் வெளியிட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்படவேண்டும்
விண்ணப்பத்தில் போது ரூ.5

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஒதுக்கீட்டின் போது ரூ.5 (முனைமம் உட்பட)
முதல் மற்றும் இறுதி அழைப்பு ரூ.2
அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன. பிரியா என்பவருக்கு ஒதுக்கப்பட்ட 500 பங்குகள் மீதான ஒதுக்கீட்டு தொகை முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை தவிர அனைத்து தொகையும் பெறப்பட்டது. அவருடைய பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டு ரூ.8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. குறிப்பேட்டு பதிவுகளை தரவும்.

**(அல்லது)**

ஆ) நிதி நிலை அறிக்கை பகுப்பாய்வின் நோக்கங்கள் யாவை?

28) அ) முத்து நிறுவமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து (அ) ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையை தயாரிக்கவும்.

| விவரம் | 2017-மார்ச் 31 ரூ. | 2018 மார்ச் 31 ரூ. |
|---|---|---|
| **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| பங்குதாரர் நிதி- | 400000 | 440000 |
| நீண்ட கால பொறுப்புகள் | 150000 | 165000 |
| நடப்பு பொறுப்புகள் | 75,000 | 82,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |
| **சொத்துகள்** | | |
| நீண்ட கால சொத்துகள் | 500000 | 600000 |
| நடப்பு சொத்துகள் | 125000 | 87500 |
| | 625000 | 687500 |

**(அல்லது)**

ஆ) முகேஷ் நிறுமத்தின் பின்வரும் இலாபநட்ட அறிக்கையிலிருந்து (1) மொத்த இலாப விகிதம் (2) நிகர இலாபவிகித் கணக்கிடவும்.

**முகேஷ் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை |
|---|---|
| i) விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| ii) இதர வருமானம் .......... | 40,000 |
| iii) மொத்த வருவாய் | 540000 |
| iv) செலவுகள் | |
| கொள்முதல் செய்த சரக்கு ...... | 1,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 20,000 |
| பணியாளர் நலனுக்கான செலவுகள் | 30,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு ...... | 50,000 |
| மொத்தம் | 3,90,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 1,50,000 |

29) அ) பங்கு முதலின் பிரிவுகளை விவரி?

**(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து அனு நிறுமத்தின் போக்கு சதவீதங்களை கணக்கிடவும்

| விவரம் | ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | I ஆண்டு | II ஆண்டு | III ஆண்டு |
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 |
| நீண்ட கால பொறுப்பு | 200 | 250 | 240 |
| நடப்பு பொறுப்பு | 100 | 80 | 120 |
| மொத்தம் | 800 | 880 | 960 |
| II. சொத்துகள் | | | |
| நீண்ட கால சொத்துக்கள் | 600 | 720 | 780 |
| நடப்பு சொத்துக்கள் | 200 | 160 | 180 |
| மொத்தம் | 800 | 880 | 960 |

- - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com